Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.

Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

**Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.**
Bishop of Kottar

No.Ch 151/26 27.03.2026

# கோட்டாறு மறைமாவட்டத்தில் திருமண அருளடையாளக் கொண்டாட்டம் சார்ந்த சில வழிகாட்டு நெறிமுறைகள்

அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, பொதுநிலை இறைமக்களே !

ஆண்டவர் இயேசுவின் உடனிருப்பும் ஆசியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக !

கோட்டாறு மறைமாவட்டத்தில் திருமண அருளடையாளக் கொண்டாட்டத்தின் போது நமது பங்குகளில் பின்பற்றி வரும் நெறிமுறைகளை மீண்டும் உங்கள் அனைவரின் பார்வைக்குக் கொண்டு வருவதோடு, அவைகளை தொடர்ந்து பின்பற்றிட அன்பாய் கேட்டுக்கொள்கின்றேன்.

1. திருமண அருளடையாளக் கொண்டாட்டங்கள் ஆடம்பரத்தன்மைகள் குறைக்கப்பட்டு பொருளுள்ள, எளிமையான கொண்டாட்டங்களாக அமைதல் வேண்டும் (இறைமக்கள் பேரவை 2024, எண் 103).

2. திருமணக் கூட்டுத்திருப்பலியில் தலைமைதாங்கும் அருள்பணியாளருடன் இணைப் பணியாளர்களாக இருவருக்கு மேல் குருக்கள் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும் (இறைமக்கள் பேரவை 2000, எண் 37, மறைமாவட்ட நெறிமுறைகள் 2014, III - 12).

3. திருமணக் கூட்டுத் திருப்பலியில்; அதிக பட்சம் மூன்று அருள்பணியாளர்கள் என்னும் முறையே தொடரும். திருமணத் திருப்பலியில் அனைத்து வகையான சடங்குகளையும் கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றுபவர்களே செய்வார்கள் (இறைமக்கள் பேரவை 2024, எண் 108).

4. பங்குகளில் ஞாயிறு தோறும் நடைபெறும் பொதுச் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, ஞாயிறு நாள்களில் திருமணத் திருப்பலிகள் நடத்தப்பட மாட்டாது (மறைமாவட்ட நெறிமுறைகள் 2014, III - 12).

5. வார நாட்களில் பங்குகளில் நடைபெறும் பொதுச் செயல்பாடுகளுக்குப் பாதிப்பு இல்லாமல் மாலை நேரத்தில் திருமணத் திருப்பலிகள் நடத்தப்படலாம் (அருள்பணியாளர் பொதுக்குழு அறிவிப்பு, 18.06.2024).

6. திருவருகைக் காலத்திலும் தவக்காலத்திலும் நடைபெறும் திருமணங்களின்போது அருள்பணியாளர் ஒருவர் மட்டுமே திருமணத் திருப்பலி நிறைவேற்றலாம் என்ற வழிமுறை மாற்றப்பட்டு, மூன்று அருள்பணியாளர்கள் திருமணத் திருப்பலி நிறைவேற்ற அனுமதிக்கப்படுகிறது (ஆயரின் கடிதம் நாள் 25.02.2023).

7. திருமணத்தை முறைப்படுத்துகின்ற திருமணத் திருச்சடங்கானது திருப்பலியின்போது இடம்பெறலாகாது என்ற வழிமுறை மாற்றப்பட்டு, குடும்பத்தினர் விரும்பினால் அன்றாட காலைத் திருப்பலியின்போது திருமணத் திருச்சடங்கு நிறைவேற்ற அனுமதிக்கப்படுகிறது (ஆயரின் கடிதம் நாள் 25.02.2023). திருப்பலியின்போது என்பது திருப்பலிக்குள்ளே வார்த்தை வழிபாட்டு நிறைவில் என்று பொருள் கொள்ளப்படும்.

8. மறைமாவட்ட ஆயரிடமிருந்து திருஅவை முறையிலான உரிய அனுமதி பெற்று சகோதர சபை கிறிஸ்தவரோடு நடைபெறுகிற திருமணம் (Mixed Marriage) அதற்கான சிறப்புத் திருப்பலியின் போது (திருப்பலிக்குள்ளே வார்த்தை வழிபாட்டு நிறைவில்) நடைபெறலாம்.

9. மறைமாவட்ட ஆயரிடமிருந்து திருஅவை முறையிலான உரிய அனுமதி பெற்று சகோதர சமயத்தவரோடு நடைபெறுகிற திருமணம் (marriage with disparity of cult) அதற்கான சிறப்புத் திருப்பலிக்கு வெளியே நடைபெற வேண்டும் (மறைமாவட்ட நெறிமுறைகள் 2014, III - 18). திருப்பலிக்கு வெளியே என்பது திருப்பலிக்கு முன்போ அல்லது பின்போ எனப் பொருள்படும்.

இவ்வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி திருமண அருளடையாளக் கொண்டாட்டங்கள் நிறைந்த மகிழ்ச்சியையும் இறைஆசியையும் பெற்றுத் தரும் கொண்டாட்டங்களாக அமைய ஆசிக்கின்றேன்.

**கிறிஸ்துவின் மனநிலையில்,**

+ S Nazarene

**ஆயர் நசரேன் சூசை**

**கோட்டாறு மறைமாவட்டம்**

குறிப்பு: இவ்வழிகாட்டு நெறிமுறைகளை **12.04.2026 ஞாயிறு** திருப்பலியில் மக்களுக்கு அறிவித்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.